# கிருபையுள்ள வார்த்தை®

**KIRUBAIYULLA VAARTHAI**

லூக்கா (LUKE) 4:22

VOL - 26
ஆண்டு சந்தா ரூ. 100/-

ஏப்ரல் - APRIL
தனிப் பிரதி ரூ. 10/-

2025
வெளிநாட்டு சந்தா ரூ. 1,000/-




## பட்டணத்தைப் பிடிக்கிறவனைப் பார்க்கிலும் தன் மனதை அடக்குகிறவன் உத்தமன்.

நீதிமொழிகள் 16:32


ஆசிரியர் Dr. பிலேமோன் ராஜா


புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

## இதழின் உள்ளே...


| | |
|---|---|
| ஆசிரியர் உரை | 3 |
| பெண்கள் பகுதி | 7 |
| வாலிபர் பகுதி | 9 |
| சிறுவர் பகுதி | 11 |



*In Memory of J.C. CHOATE*

*Guest Editors :* **Betty Choate, Jerry & Paula Bates**

*Editor :* **Dr. P.C. PHILEMON RAJA**



ஆசிரியர் குழு

**V. கிங்ஸ்லி ராஜா,** M.Th.,
**R. ஆண்டனி ராஜா,** D.Th.,
**E. ஜோசப் பிரதீப்,** B.Th., **C. கியாமிலஸ் கார்த்திக்,** B.Sc.,
**P. பேபி ராஜா,** D.Th., **P. பெவர்லி லிடியா** B.B.A.,

சட்ட ஆலோசகர்கள்

அட்வகேட் **B.** கருப்பசாமி பாண்டியன் B.A., B.L.
அட்வகேட் **V.** சுப்பிரமணியன் M.A., B.L.


## கிருபையுள்ள வார்த்தை TV நிகழ்ச்சிகள்

**தமிழன் T.V. யில்**

**ஞாயிறு காலை 7.00 மணி**

**நம்பிக்கை T.V. யில்**

**ஞாயிறு மதியம் 3.30 மணி**

செய்தியாளர்கள்

போதகர். **பிலேமோன் ராஜா** M.A., M.Th.,
(Director - JC School of Evangelism)

சகோ. **கிங்ஸ்லி ராஜா** M.Th.,
(இணை ஆசிரியர் – கிருபையுள்ள வார்த்தை)

இந்த மாதம் பிறந்த நாள்
மற்றும் திருமண நாள் காணும்
வாசகர்கள் அனைவருக்கும்
அன்பின் வாழ்த்துக்கள்...





நமது
**'கிருபையின் கீதங்கள்'**
பாடல் புத்தகம்
புதிய பதிப்பு
ஆயத்தமாக உள்ளது.

554 தமிழ் பாடல்கள்
40 ஆங்கில பாடல்கள்
112 சேர்ந்திசை பாடல்கள்
464 பக்கங்கள்

வேண்டுவோர் தொடர்பு கொள்ளவும் : **92 4431 4431, 999 426 7004**

**கிருபையுள்ள வார்த்தை**
நம்மை சுயகட்டுப்பாட்டுடன் வாழ வழிநடத்தும்
விண்ணக பிதாவின் வார்த்தை

YouTube
**@graciouswordcoc**



**World Literature Publication :** Kirubaiyulla Vaarthai, Post Box No. 15, Arasaradi, Madurai - 625 016. India

ஆசிரியர் உரை

- P.C. பிலேமோன் ராஜா

# தன்னடக்கம்
## SELF - CONTROL



பிரியமான கிருபையுள்ள வார்த்தை வாசகர்கள் அனைவருக்கும், இறைமைந்தன் இயேசுகிறிஸ்துவின் ஈடுஇணையற்ற நாமத்தில் எனது அன்பின் வாழ்த்துக்கள் மற்றும் ஜெபங்கள்.

அன்பானவர்களே, நாம் இந்த மாதம் தன்னடக்கம் (சுயகட்டுப்பாடு) என்றால் என்ன? அவற்றினை எவைகளில் நாம் வெளிப்படுத்திட வேண்டும் என்பதனை பற்றி, பைபிளின் துணைக்கொண்டு தியானம் செய்வோம்.

தன்னடக்கம் அல்லது சுயகட்டுப்பாடு என்பது ஒருவர் தன்னை தானே கட்டுபடுத்துதல் என்றும் (SELF-RESTRAINT), தன்னைதானே ஒழுக்கமாக்கி கொள்ளுதல் (SELF - DISCIPLINE) என்றும் நாம் அறிய முடிகின்றது. அதாவது ஒருவரின் சொந்த நடத்தை, பழக்கவழக்கங்கள் மற்றும் மரபுகளை கட்டுப்படுத்தும் திறன் என்றும் சொல்லலாம். இது ஒருவருக்கு பலவீனங்களை வென்று ஒரு பயனுள்ள வாழ்க்கையை வாழ உதவுகிறது. அதாவது வெற்றிகரமான மற்றும் பயனுள்ள வாழ்க்கையை வாழ விரும்பும் ஒருவருக்கு சுய கட்டுப்பாடு தேவை. ஒருவர் தன் வாழ்வில் அடையவேண்டிய இலக்குகளை அடைவதற்கு, அவசியமான ஒரு அறிவாற்றல் செயல்முறையாக சுய கட்டுப்பாடு உள்ளது.

ஆயினும், எந்த ஒரு மனிதனையும் இன்னொரு மனிதன் எப்பொழுதும் கட்டுப்படுத்த முடியாது. மானுடம் இன்னொரு மனிதனுக்கு கட்டுபட்டு போவதினை விரும்புவதில்லை. ஆகையால் தான் பவுல் தன்னை தானே கட்டுப்படுத்திக்கொண்டதாக கூறுகின்றார் **(1கொரி. 9:27).** ஒருவர் தன்னை தானே கட்டுப்படுத்தி, கர்த்தருக்கு தன்னை அர்பணித்து வாழ்வதை பற்றி பைபிள் தெளிவாக பேசுகின்றது (ரோமர் 6). மேலும், நம் வாழ்வை வசப்படுத்த, நம்மை கர்த்தருக்கு அடிமையாக ஒப்புக்கொடுத்து, கட்டுபாட்டுடன் வாழ்வது அவசியமாகும். தன்னடக்கத்துடன் வாழ நாம் எவைகளையெல்லாம் கட்டுப்படுத்த வேண்டும்.

### 1. உணர்ச்சிகளை கட்டுப்படுத்துதல்
### CONTROLLING EMOTIONS

**எபேசியர் 4:26,31** நீங்கள் கோபங்கொண்டாலும் பாவஞ்செய்யாதிருங்கள், சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாக உங்கள் எரிச்சல் தணியக்கடவது. சகலவிதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும், மற்ற எந்தத் துர்க்குணமும் உங்களைவிட்டு நீங்கக்கடவது.



தன்னை தானே கட்டுப்படுத்த நாம் முதலாவதாக, நம் உணர்ச்சிகளை கட்டுப்படுத்த வேணடும். அதாவது நம் உணர்ச்சிகளுக்கு, நாம் அடிபணியாதிருக்க வேண்டும். உணர்ச்சியின் போக்கில் நாம் செல்லாமல், உணர்ச்சியை நம் போக்கிற்கு தேவ மகிமைக்கு நேராக திருப்ப வேண்டும். கோபம், மூர்க்கம், காமம், மகிழ்ச்சி என்ற உணர்ச்சிகள் என்பது இயல்பானதே. அவைகளை நாம் நெறிபடுத்த தவறிவிட்டால், நம்மை மாபெரும் பாவங்களுக்கு நேராக வழிநடத்தி செல்லும் ஆற்றல் கொண்டவை.

தனது உணர்ச்சியின் போக்கில் செல்பவரால், கர்த்தரை மகிமைப்படுத்தும்படியாக வாழவும் முடியாது **(யாக்கோபு 1:19,20).** உணர்ச்சிகள் நமக்கு தேவை. ஆயினும் அவைகள் வசனத்தின்படி நெறிப்படுத்தபட வேண்டும் **(நீதி. 19:11).** கர்த்தருடைய வார்த்தை எங்கே, எப்படி இருக்க சொல்கின்றதோ, அங்கே அவ்வாறு இருக்க வேண்டும் **(ரோமர் 12:15)** அது நமது உணர்ச்சிகளை நாம் கட்டுபடுத்த உதவும்.

## 2. உணர்வுகளை கட்டுப்படுத்துதல்
## CONTROLLING KNOWLEDGE

**1 கொரிந்தியர் 4:6** சகோதரரே, எழுதப்பட்டதற்கு மிஞ்சி எண்ணவேண்டாமென்று நீங்கள் எங்களாலே கற்றுக்கொள்ளவும், ஒருவனும் ஒருவனிமித்தம் மற்றொருவனுக்கு விரோதமாய் இறுமாப்படையாதிருக்கவும், நான் உங்கள்நிமித்தம் என்னையும் அப்பொல்லோவையும் திருஷ்டாந்தமாக வைத்து, இவைகளை எழுதினேன்.



தன்னைத்தானே கட்டுப்படுத்த நாம் இரண்டாவதாக, நம் உணர்வுகளை கட்டுப்படுத்த வேணடும். அதாவது நம் அறிவினை அடக்க வேண்டும் (அடக்கி ஆள வேண்டும்). எல்லாம் அறிந்த கர்த்தர் நமக்கு கொடுத்துள்ள அவருடைய வார்த்தையை கற்றுக்கொண்டு, அதில் சொல்லபட்ட சத்தியத்தினை அப்படியே விசுவாசிப்பதும் மற்றும் அதற்கு கீழ்படிவதும் அறிவார்ந்த செயலாகும் **(2 யோவான் 7-11).**

கர்த்தருடைய வார்த்தையினால் வருகின்ற அறிவு மிக உன்னதமானதாகும் **(சங்கீதம் 119:98-101).** கர்த்தருடைய வார்த்தையைவிட யாரொருவரும், எந்த புத்தகமும் நமக்கு இம்மைக்கும் மறுமைக்கும் தேவையான மேம்பட்ட அறிவினை உண்டாக்கிவிட முடியாது என்ற உண்மையை நாம் உணர வேண்டும். இவ்வுலகம் கற்பிக்கின்ற மேம்பட்ட அறிவு என்பது கர்த்தருக்கு முன்பாக பைத்தியமாக இருக்கின்றது அதற்கு அடிபணிந்து நம்மை நாமே ஏமாற்றிக்கொள்ள வேண்டாம் என பைபிள் எச்சரிக்கின்றது **(1 கொரிந்தியர் 3:18-20).** இறுமாப்பினை உண்டாக்குகின்ற அறிவினைவிட, பக்திவிருத்தியை உண்டாக்குகின்ற அன்பே மேலானது **(1கொரிந்தியர் 8:1,2)** என்பதனை நினைவில் கொள்வோம்.

## 3. சிந்தனைகளை கட்டுப்படுத்துதல்
## CONTROLLING THOUGHTS

**ரோமர் 12:3** அல்லாமலும், எனக்கு அருளப்பட்ட கிருபையினாலே நான் சொல்லுகிறதாவது உங்களில் எவனானாலும்


### வாசகர்களின் கவனத்திற்கு

அன்பான வாசகர்களே!
உங்கள் ஆண்டு சந்தா தொகையை
G-Pay, PhonePe மூலம் அனுப்பி
உங்கள் சந்தாவை
புதுப்பித்துக் கொள்ளவும்.
நன்றி!

ஆண்டு சந்தா : ரூ. 100/-
No. 92 4421 4421

வங்கிக் கணக்கில் செலுத்த,
A/c Name : Kirubaiyulla Varthai
A/c No. : 57022317422
IFSC Code : SBIN0011068
Branch : SBI - Bye Pass Road Branch, Madurai.

தன்னைக்குறித்து எண்ணவேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல், அவனவனுக்கு தேவன் பகிர்ந்த விசுவாச அளவின்படியே, தெளிந்த எண்ணமுள்ளவனாய் எண்ணவேண்டும்.

தன்னைத்தானே கட்டுப்படுத்த நாம் அடுத்ததாக, நம் சிந்தனைகளை கட்டுப்படுத்த வேணடும். இது சிந்தனை என்னும் சிறகுகளை முறித்தல் அல்ல, மாறாக, சிந்தனைகளை சீர்படுத்தி, சிறகுகளை (சிந்தனைகளை) பயன்படுத்தி, சிறந்த வழியில் சீராக பயணிக்க செய்தலாகும். நமது சிந்தனைகளே நமது செயல்களுக்கும், வார்த்தைகளுக்கும் மூலகாரணியாக அமைவதால், நாம் நமது சிந்தனைகளை கட்டுபடுத்த வேண்டியது அவசியமாகும்.

பேதுரு, மனதின் அரையை கட்டிக்கொள்ளுங்கள் என்கின்றார் **(1பேதுரு 1:13)** இல்லாமல் போகும் பொருட்களின் மீது கண்களை பறக்கவிடக்கூடாது என்கின்றார் **(நீதிமொழிகள் 23:5)** பைபிள் நம் சிந்தனைகளை எதனை நோக்கி திருப்ப வேண்டும், எவ்வாறாக வைத்துக்கொள்ள வேண்டும் என்று கற்றுத்தருகின்றது **(பிலி. 4:8).**

## 4. வார்த்தைகளை கட்டுப்படுத்துதல்
## CONTROLLING WORDS

**எபேசியர் 4:29** கெட்டவார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்படவேண்டாம்; பக்திவிருத்திக்கு ஏதுவான நல்லவார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள்.




தன்னைத்தானே கட்டுப்படுத்த நாம் அடுத்ததாக, நம் வார்த்தைகளை கட்டுப்படுத்த வேணடும். இது எதுவும் பேசாமல் ஊமையாக இருத்தல் அல்ல, உண்மையாக இருத்தல் மற்றும் உண்மைக்காக இருத்தலாகும். தன் வார்த்தைகளை அடக்குகிறவனை பைபிள் அறிவாளி என்கின்றது **(நீதி. 17:27)** மேலும் தன் வாய் மற்றும் நாவை அடக்குகிறவர்கள் இடுக்கண்களுக்கு விலக்கிக் தங்களை காக்கின்றார்கள் என்கின்றது **(நீதி. 21:23).**

நாவை அடக்குதலின் அவசியம் பற்றி ஆவியானவர், யாக்கோபு நிருபம் 3ம் அதிகாரத்தில் தெளிவாக விளக்குகின்றார். ஆண்டவர் இயேசுவும் நாவை அடக்காவிடில் ஏற்படும் விளைவுகளை பற்றி எச்சரித்தார் **(மத்தேயு 12:31-37).** நெல்லை கொட்டினால் அள்ளிவிடலாம், சொல்லை கொட்டினால் அள்ளமுடியாது என்பர். ஆகையால் நாம் நமது வார்த்தைகளை அடக்குவோம்

## 5. உறவுகளை கட்டுப்படுத்துதல்
## CONTROLLING RELATIONSHIP

**மத்தேயு 10:37** தகப்பனையாவது தாயையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல் மகனையாவது மகளையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல.

தன்னை தானே கட்டுப்படுத்த நாம் அடுத்ததாக, நம் உறவுகளை கட்டுப்படுத்த வேணடும். இது நாம் நமது உறவுகளை புறக்கணித்தல் பற்றியது அல்ல, மாறாக உறவுகளை உன்னதத்தினை நோக்கி வழிநடத்துதலாகும். கொர்நெலியு தானும் தன் குடும்பம் மாத்திரம் இரட்சிக்கப்பட்டு, பரலோகம் நோக்கி பயணிக்க விரும்பாமல், தன் உறவினர்களையும், நெருங்கிய நண்பர்களையும் சத்தியத்தின் வழியிலே நடத்திச்செல்ல விரும்பினார். அதற்காக முயற்சியும் எடுத்து, அவர்களை சத்தியத்தினை கேட்க வைத்தார். **(அப். 10:24-48).**

நம் உறவுகளின் மத்தியில் எவ்வாறு நடக்கின்றோம்? அவர்களது ஆத்துமா இரட்சிக்கபட விரும்புகின்றோமா? அதற்காக ஜெபிக்கின்றோமா? அவர்களை வசனத்தினை

கேட்க, கற்றுக்கொள்ள உதவுகின்றோமா? அல்லது திருமண அழைப்பிதல் மற்றும் ஏதேனும் காரியங்கள் வந்தால், கர்த்தரையும் சபையையும் புறக்கணித்து, உறவுகளை கேளிக்கைகளின் பின்னே அழைத்துச்செல்கின்றோமா? நாம் எப்படி இருக்கின்றோம் என நாம் சிந்திப்போம், செயல்படுவோம் **(லூக். 14:26, அப், 16:15).**

## 6. உற்சாகத்தினை கட்டுப்படுத்துதல் CONTROLLING ENTHUSIASM

**நீதிமொழிகள் 25:28** தன் ஆவியை அடக்காத மனுஷன் மதிலிடிந்த பாழான பட்டணம் போலிருக்கிறான்.



தன்னைத்தானே கட்டுப்படுத்த நாம் அடுத்ததாக, நம் உற்சாகத்தினை கட்டுப்படுத்த வேண்டும். இது சுறுசுறுப்பை குறைத்தல் அல்ல, சுறுசுறுப்பினை தவறாக வழிநடத்தி செல்லாதிருத்தல் என்பதாக இருக்கின்றது. நம்மில் அநேகர் உற்சாகம் (குஷி) வந்துவிட்டால், என்ன செய்கின்றோம், என்ன பேசுகின்றோம் என்ற நிதானம் இல்லாமல் போய்விடுவோம். அதனால் பல விபரீதங்களையும் சந்தித்திருப்போம். நாம் நமது உற்சாகத்தினை நேர்வழியில் நடத்த பழக்க வேண்டும்! **(நீதி. 16:32).**

ஆவிக்குரிய காரியங்களிலும் இது தேவைப்படுகின்றது **(1கொரிந்தியர் 14:15,32)** தேவ சமூகத்தில் தாங்கள் என்ன செய்ய வேண்டும்? என்ன செய்ய கூடாது? என்ற நிதானத்தினை இழந்து செயல்படுவது ஒழுங்கீனமாகும் **(1கொரிந்தியர் 15:40).** சோம்பல் கூடாது தான், சோம்பல் பயங்கரமான விளைவுகளை உண்டுபண்ணும் **(நீதி. 10:4,5),** அதேபோல் தான் கட்டுபாடற்ற உற்சாகமும் உண்டாக்கும் **(நீதிமொழிகள் 25:28).** எல்லாவற்றிலும் படபடப்பாக இருக்க வேண்டிய அவசியமில்லை, நிதானமாக இருக்க வேண்டியவைகளில் நிதானமாக இருப்போம் **(நீதிமொழிகள் 16:13).**

## 7. உறுதிமொழிகளை கட்டுப்படுத்துதல் LIMITATION OF AFFIRMATIONS

**நீதிமொழிகள் 6:1,2** என் மகனே, நீ உன் சிநேகிதனுக்காகப் பிணைப்பட்டு, அந்நியனுக்குக் கையடித்துக்கொடுத்தாயானால், நீ உன் வாய்மொழிகளால் சிக்குண்டாய், உன் வாயின் வார்த்தைகளால் பிடிபட்டாய்

தன்னைத்தானே கட்டுப்படுத்த நாம் இறுதியாக, நம் உறுதிமொழிகளை (வாக்குறுதிகளை) கட்டுப்படுத்த வேணடும். இது தீர்மானங்களை தவிர்த்தல் அல்ல மற்றும் பொறுப்புகளை துறத்தலும் அல்ல. மாறாக சரியான தீர்மானங்களில் நேர்மையாக இருப்பதாகும். நம்மால் செய்ய இயலாதவற்றை போலியான வாக்குறுதியாக கொடுக்கக்கூடாது. அதனை மற்றவர்களுக்காகவும் செய்யக்கூடாது **(நீதி. 20:16).**

நாம் கர்த்தருடைய வார்த்தைகளை படிக்கும் போது, உறுதிமொழிகளை எடுப்போம். அது நிச்சயம் செய்ய வேண்டிதே. அவ்வாறு நாம் எடுக்கின்ற தீர்மானங்கள் வசனத்தின்படியானதா? நம் விருப்பத்தின்படியானதா? என ஆராய்ந்து செயல்படுவது அவசியம் **(ரோமர் 10:2).** சிலர், அதற்காகத்தான் நான் எந்த தீர்மானமும் எடுப்பதில்லை என்கின்றனர், அதுவும் தவறான செயலாகும். நாம் தீர்மானங்களை வசனத்தின்படி எடுத்து, அதனை செயல்படுத்த வேண்டும் **(பிரசங்கி 5:1-4)** என்றே பைபிள் நம்மை ஊக்கப்படுத்துகின்றது என்பதனை நினைவில் கொள்வோம்.

அன்பானவர்களே, நம்மை நாமே வசனத்தின்படி, நம்மை கிறிஸ்துவிற்குள் கட்டுப்படுத்த வேண்டும். அவ்வாறு கட்டுப்பாட்டுடன் வாழ்வோம். கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

பெண்கள் பகுதி

## கர்த்தரால் கனம்பெற்றவர்கள்

பிரியமானவர்களே! ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். உங்கள் அனைவருக் காகவும் தொடர்ந்து ஜெபிக்கின்றோம்.

இந்த மாதமும் நாம் வேதத்திலிருந்து சில காரியத்தை பெண்களாகிய நமக்கென்று கற்றுக் கொள்வோம்.

அப்போஸ்தலனாகிய பவுலின் ஊழியத்தின் நாட்களில் நாம் நன்கு கவனித்துப் பாரத்தால் அவர் தன்னோடுகூட விசுவாசமுள்ள சகோதர, சகோதரி களையும் ஊழியத்தில் இணைத்து செயல்படுபவராகவே காண முடியும். அப்படி பவுலின் ஊழியத்தின் காலங்களில் தன்னோடுகூட ஆதரவாக இருந்த பெண்களில் ஒரு பெண்ணைக் குறித்து (ரோமர் 16:1,2)ல் சொல்லியிருக்கிறார்.

யார் அந்த பெண்? அவள் தான் பெபேயாள்.

பவுலால் ரோமாபுரிக்கு அறிமுகம் செய்யப்பட்டவள்.

கெங்கிரேயா ஊரைச் சேர்ந்தவள்.

இவளைப் பற்றி பவுல் நல்வார்த்தைகளை சொல்கிறார்.

“நம்முடைய சகோதரி” என்று பவுல் அந்த பெண்ணை ரோமாபுரி மக்களுக்கு அறிமுகப் படுத்தினார்.

தேவனுடைய கிருபையினாலே இவள் கிறிஸ்துவுக்குள் விசுவாசிகளுக்கு சகோதரியாக இருந்திருக்கிறாள். இயேசு கிறிஸ்துவின் ஊழியக் காலத்தில் ஒரு சில பெண்கள் ஊழியத்தில் அவருக்கு ஆதரவாக இருந்து ஊழியம் செய்தார்கள். அப்போஸ்தலர்களுக்கும் ஒருசில பெண்கள் ஊழியத்தில் உதவியாக இருந்திருக் கிறார்கள். அப்படிப்பட்ட ஊழியக்காரிகளில் இவளும் ஒருவர்.

கர்த்தருக்குள் பரிசுத்தவான்களை ஏற்றுக் கொள்வதைப்போல பெபேயாளையும் ஏற்றுக் கொள்ளுங்கள் என்று பவுல் சொல்வதின் மூலம் அந்த பெண் அதற்கு தகுதியுள்ளவளாக இருந்திருக்கிறார் என்பதை வேதவசனங்களின் மூலம் நாம் தெரிந்துக்கொள்ள முடியும். அவர்களின் நடக்கை கர்த்தருக்கேற்றபடி இருந்திருக்கிறது.

பெபேயாள் பவுலுக்கும், மற்ற அநேகருக்கும் ஊழியத்தில் ஆதரவாக இருந்ததினால் அவளுக்கு வேண்டிய காரியத்தில் நீங்கள் அவளுக்கு உதவி செய்யுங்கள் என்று ரோமாபுரியினருக்கு கூறியுள்ளார்.

பெபேயாள் யார் என்றும், எப்படி அவர்களை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும், அவர்களின் குணாதிசயம், ஊழியம் எப்படிப்பட்டது என்றும் நாம் படித்தோம்.

பிரியமானவர்களே! (ரோமர் 16:1,2) இரண்டே வசனங்களில் இந்த பெண்ணைப் பற்றி சொல்லப் பட்டாலும் அவளிடத்திலிருந்து நற்காரியங்களை நாம் தெரிந்துகொள்கிறோம்.

பிரியமானவர்களே! நாம் தேவனுக்கும், சபைக்கும், தேவபிள்ளைகளுக்கு உதவியாகவும் இருக்க வேண்டும். நம்மைப்போல பாடுள்ள பெண்களாகிய அநேகர் வேதத்திலும் இருக்கிறார்கள். ஆனாலும்,

## அறிந்து கொள்வோம்

### மாதம் ஒரு “பூ”

### தென்னம் பூ



இலங்கை, இந்தியா போன்ற வெப்ப மண்டல நிலப்பரப்புகளில் வளரும் மரம் தென்னை ஆகும். தென்னையின் அனைத்து பகுதிகளும் பயன்மிக்கவை. சிறப்பாக தேங்காய் தென்னிந்திய சமையலில் முக்கிய இடத்தைப் பெறுகிறது.

மணற்பாங்கான நிலத்தில் வளரவல்ல தென்னை, உப்புநீரைத் தாங்கி வளரக் கூடியது. நல்ல மழையும் சூரியஒளியும் கிடைக்கும் இடங்களில் இது நன்கு வளரும். தென்னை மரம் 30 மீ வரை வளரக் கூடியது. இதற்கு கிளைகள் கிடையாது. இதன் உச்சியில் இருக்கும் தென்னை ஓலை 4-6 மீ நீளமுடையது.

இந்தியாவில் தமிழகம், கேரளா, கர்நாடகம் மற்றும் ஆந்திரா போன்ற மாநிலங்களில் தென்னை அதிகளவில் வளர்க்கப்படுகிறது.

அவர்கள் தேவ சித்தம் நிறைவேற தங்கள் வாழ்வை அர்ப்பணித்து வாழ்ந்தார்கள் (லூக்கா 1:38). இங்கு இயேசுவின் தாயாகிய மரியாளைப் பற்றி படிக்கும்போது அவள் தன்னை தேவனுக்கு அடிமையாக அர்ப்பணித்தாள். தேவனால் தன் வாழ்வில் எனக்கு என்ன நடக்க வேண்டும் என்று அவர் நியமித்திருக்கிறாரோ அது நடக்கும்படி தன்னை ஒப்புக்கொடுத்தாள். மரியாளைப் பற்றி நாம் படிக்கும்போது நாம் புரிந்துகொள்ளும் காரியம் இயேசுவை இந்த பூமிக்குக் கொண்டுவர தேவைப்பட்ட ஒரு கருவி. உலக இரட்சகரை சுமக்கும் கிருபை அவளுக்கு தன் வாழ்வில் கிடைத்தது (லூக். 1:31). தனக்கு கிடைத்த வாய்ப்பை அந்த பெண் தட்டிக்கழிக்காமல் ஏற்றுக் கொண்டாள்.

பிரியமானவர்களே! நம் வாழ்வில்கூட இயேசுவைப் பற்றி சொல்லும் வாய்ப்பு. அவரது வார்த்தையை நம் மனதில் சுமந்து மற்ற மக்களுக்கு எடுத்து சொல்லும் பாக்கியம், சிலாக்கியம் இந்த காலத்திலும் கிடைத்திருக்கின்றது. அதை நாம் கவனத்துடனே அர்ப்பணிப்போடே செய்ய நம்மை நாமே அர்ப்பணிக்க வேண்டும். அப்படி செய்யும்போது (மத். 28:18-20) உலகத்தின் முடிவுபரியந்தம் அவர் நம்மோடே இருப்பார்.

இந்த மாதம் நாம் படித்த பெண்கள் இருவருமே கடவுளின் வேலையை நிறைவேற்ற தங்களை அர்ப்பணித்தவர்கள். நாமும் அதுபோல ஈடுபடவும், நற்செயல்களை செய்யவும் முன் வருவோம்.

அதற்கு நம் சூழ்நிலைகளோ, நம் மனதின் எண்ணங்களோ தடையாக இருக்கக்கூடாது. தேவ சித்தம் நிறைவேற நம்மைநாமே அர்ப்பணித்து வாழ்வோம். கர்த்தர்தாமே நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதித்து, பெலப்படுத்துவாராக.

– சகோதரி. **பெவர்லி விடியா**

## சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | A. செந்தமிழ் யாழினி | – | தங்கமேடு |
| 2. | M. அபி பிலேமோன் | – | எழுகம்வலசு |
| 3. | V. ஏஞ்சல் ஜோயன்னா | – | மதுரை |
| 4. | D. டேஃப்னி | – | சென்னை |
| 5. | D. ஜனித்தா | – | சென்னை |
| 6. | A. ஹானா ஜோதிராணி | – | மதுரை |
| 7. | A. சுபிக்ஷா | – | பெருமாள் வலசு |
| 8. | M. ஜோனத்தான் | – | கரூர் |
| 9. | J. நவீன் பீட்டர் | – | மதுரை |
| 10. | J. கிறிஸ்டினா ஜாய்ஸ் | – | மதுரை |
| 11. | S. ஜூடா லியோ | – | ரஸ்தா |
| 12. | G. ஜெர்லின் | – | ரஸ்தா |
| 13. | A. சாம்குமார் | – | பெருமாள் வலசு |

## Gospel Through Media by Evangelism Team

**Philemon & Kingsly in Tamil:** **Tamilan TV:** Sunday 7:00 - 7:15 am.
**Nambikkai TV:** Sunday 3:30 - 4:00 pm.

**Rajanayagam & Benny Martin in Tamil:** **Nambikkai TV:** Tuesday 6:30-7:00 am & Friday 7:30 - 8:00 am

**Arjunan in Tamil:** Every Monday - Saturday 6:00 pm on **Joy TV.**

**Hindi TV program:** **Sunny, Francis, & Vinay David:** Sunday (7:00-7:30) pm, Friday 8:00-8:30 pm All on **Subha Sandesh** Hindi Channel

**P. K. Varghese in Malayalam:** Every Saturday 6:00-6:30 am on **Jai Hind TV.**

**Joshua & Ricky Gootam in Telugu:**
Every Sunday at 6:00-6:30 p.m. on **Subhavartha TV.**
Saturday at 6:00-6:30 a.m. on **Araadhana TV.**
Every day at 7:00 a.m. and 3:00 p.m. on **Kanthi TV** in A. P. only.

**Amul Bansod – Aurangabad (Marathi)**

**MCN News** channel: Monday, Wednesday, Friday – 7:30 AM to 8:00 AM.

வாலிபர் பகுதி:

# யவீரு மகள் உயிரோடெழுப்பப்படுதல்

**மத்தேயு 9:18, 19, 23-26; மாற்கு 5:22-24, 35-43; லூக்கா 8:41, 42, 49-56**

**ஜெபஆலயத்தலைவனின் வேண்டுகோள்:**

**மாற்கு 5 : 22, 23** அப்பொழுது, ஜெபஆலயத்தலைவரில் ஒருவனாகிய யவீரு என்பவன் வந்து, அவரைக் கண்டவுடனே, அவர் பாதத்திலே விழுந்து:

என் குமாரத்தி மரண அவஸ்தைப்படுகிறாள், அவள் ஆரோக்கியமடையும்படிக்கு நீர் வந்து, அவள்மேல் உமது கைகளை வையும், அப்பொழுது பிழைப்பாள் என்று அவரை மிகவும் வேண்டிக்கொண்டான்.

பாலஸ்தீனா தேசத்தில் உள்ள கப்பர்நகூம் பட்டணத்தில் இந்த அற்புதம் நடந்தது. இந்த கப்பர்நகூமில் இயேசு அநேக அற்புதங்களைச் செய்திருக்கிறார். குறிப்பாக யோவான் 4ம் அதிகாரத்தில் ராஜாவின் மனுஷனுடைய மகனுக்கு அற்புத சுகத்தைக் கொடுத்தார். மாற்கு 1ம் அதிகாரத்தில் ஜெபஆலயத்தில் அமர்ந்திருந்த அசுத்தஆவி பிடித்த மனிதனுக்கு சுகம் கொடுத்ததைப் பார்க்கிறோம். ஒவ்வொரு பகுதியிலும் யூதர்களுக்கு ஒரு ஆலயம் இருக்கும். அதற்கு ஜெப ஆலயம் என்று பெயர். இயேசு லேகியோன் என்ற பிசாசு பிடித்த மனிதனுக்குள்ளிருந்த அனேக பிசாசுகளைத் துரத்தின பின் மறுபடியும் இக்கரைக்கு வந்தார். அப்பொழுது யவீரு என்னும் பெயர் கொண்ட ஜெபஆலயத்தலைவன் இயேசுவிடம் வந்தான். இவன் ஒரு யூதன். கப்பர்நாகூமில் வசிப்பவன். இவன் மிகவும் கனத்துக்குரியவன், வசதி படைத்தவன்.

இவனுக்கு ஒரே ஒரு மகள் இருந்தாள். அவளுடைய வயது 12. அவள் மரண அவஸ்தைப் படுவதைத் தாங்கக் கூடாமல் அழுதான். அப்பொழுது இயேசு கப்பர்நகூமிற்கு வருகிறார் என்று கேள்விப்பட்டான். தன்னுடைய குமாரத்தி வியாதியாயிருக்கிறாள் என்று கூறாமல், மரண அவஸ்தைப்படுவதாகக் கூறினான். (மத்தேயுவில் இப்பொழுது மரித்து விட்டாள் என்றுள்ளது) இயேசு வந்து அவருடைய கைகளைத் தன் மகளின் மேல் வைத்தால், அவள் ஆரோக்கியம் அடைவாளென்றும், பிழைத்துக் கொள்வாளென்றும் கூறினான். இந்த ஜெபஆலயத்தலைவன் ரோம அலுவலகத்தில் வேலை செய்கிறவன். இவன் ஆசாரியனின் பலிகளைச் செலுத்தக் கூடியவன், பழைய ஏற்பாட்டை நன்றாகத் தெரிந்தவன், மனிதர்களுக்குத் தேவனைக் குறித்து போதிக்கிறவன், தெய்வ பக்தியுள்ளவன். இவனுடைய வேலை ஜெபஆலய ஆராதனையை சரியானபடி கண்காணிப்பது, ஆராதனைக்குள்ள ஒழுங்குகளையெல்லாம் செய்வது, ஜெபஆலய சம்பந்தமான நடவடிக்கைகளையெல்லாம் கண்காணிப்பது என்பதாகும்.

இத்தனை தகுதிகளிருந்தும் தன்னுடைய மகளுக்கு உதவ முடியவில்லை. அப்படிப்பட்ட இந்த மனிதன் தன்னுடைய அந்தஸ்தைப் பார்க்காமல் ஆளனுப்பி இயேசுவைத் தன்னிடம் வரச் சொல்லாமல் தானே நேரில் இயேசுவிடம் வந்தான். அப்பொழுது யூதர்கள் இயேசுவிடம் செல்லக்கூடாது என்ற கட்டுப்பாடு இருந்தது. யவீருவோ அதையெல்லாம் மீறி இயேசுவிடம் வந்தான். இவன் ஜெபஆலயத் தலைவனாக இருந்தபோது இயேசுவை எதிர்த்திருக்கலாம். ஆனால் நெருக்கடி வந்தபோது இயேசுவைத் தேடி வந்தான். அப்பொழுது இயேசு அவனைக் கடிந்து கொள்ளாமல் அவனோடு அவனுடைய வீட்டிற்கே சென்று இந்த அற்புதத்தைச் செய்தார். நாமும் முன்னால் இயேசுவை வெறுத்திருக்கலாம். நம்முடைய பாடுகள், வேதனைகள் மத்தியில் இயேசுவைத் தேடிச் செல்லும்போது நம்மை வெறுக்காமல் ஏற்றுக் கொள்வார். இவன் இயேசுவின் பாதத்தில் விழுந்து பணிந்து கொண்டதைப் பார்க்கிறோம்.

யாராயிருந்தாலும் இயேசு வணங்கத்தக்கவர் என்பதை யாவரும் அறியும்படியாக ஜெபஆலயத்தலைவனின் செயல் அமைந்தது. பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடான கிறிஸ்துவின் கால்களில் விழுந்ததைக் காண்பிக்கிறது. மோசேயின் நியாயப்பிரமாணம் சிலுவையில் முடிந்ததைக் காண்பிக்கிறது. இயேசு ராஜாதி ராஜா என்பதைக் காண்பிக்கிறது.

இயேசுவின் வல்லமைக்கு முன் பலிகள் ஒன்றுமில்லை என்றும், இயேசுவுக்கு முன்பாக நியாயப்பிரமாணமும் ஒன்றுமில்லை என்றும் அறிந்து கொண்டான். **லூக்கா 13 : 14** ல் ஒரு ஜெப ஆலயத்தலைவன் இயேசு ஓய்வுநாளில் அற்புதம் செய்வதைப் பார்த்து கோபமடைந்து ஓய்வுநாளில் எதுவும் செய்யக் கூடாது என்றதை பார்க்கிறோம்.

**பெரும்பாடுள்ள ஸ்திரீ சுகம் பெற்றாள்:**

**மாற்கு 5 : 24** இயேசு அவனோடேகூடப் போனார். திரளான ஜனங்கள் அவருக்குப் பின் சென்று, அவரை நெருக்கினார்கள்.

இயேசு ஜெபஆலயத்தலைவனின் வேண்டுகோளுக்கு இணங்கி அவனோடு கூடப் போனார். ரோம சாம்ராஜ்யத்தின் அலுவலராயிருந்தாலும், ஜெபஆலயத் தலைவனாயிருந்தாலும், கானானியப் பெண்ணாயிருந்தாலும், பாவியான பெண்ணாயிருந்தாலும், கள்ளனாயிருந்தாலும் இயேசு எல்லோரின் வேண்டுதல்களையும் கேட்பவராக இருப்பதை அறிகிறோம். அப்போது திரளான ஜனங்கள் அவரை நெருக்கினார்கள். இந்த இடைப்பட்ட நேரத்தில் பெரும்பாடுள்ள ஒரு ஸ்திரீ, தன்னுடைய குணமாகாத வியாதியினால், இயேசுவின் வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டுக் குணம் பெற்றாள். அதனால் இயேசுவின் பிரயாணம் தாமதமானது.

**ஜெபஆலயத்தலைவனுக்கு வந்த செய்தி:**

**மாற்கு 5:35** இயேசு இப்படிப் பேசிக் கொண்டிருக்கையில், ஜெபஆலயத்தலைவனுடைய வீட்டிலிருந்து சிலர் வந்து: உம்முடைய குமாரத்தி மரித்துப் போனாள், இனி ஏன் போதகரை வருத்தப்படுகிறீர் என்றார்கள்.

பெரும்பாடுள்ள பெண்ணால் இயேசுவின் பிரயாணம் காலதாமதமானதால் யவீரு மிகவும் வேதனைப் பட்டாலும், இயேசுவிடம் தன்னுடைய கஷ்டத்தைக் கூறிவிட்டதால் காலம் தாழ்ந்தாலும், இயேசு பார்த்துக் கொள்வார் என்ற விசுவாசத்துடன் இருந்தார். ஆனால் அவருடைய வீட்டிலிருந்து தன்னுடைய மகள் மரித்து விட்டதாகச் செய்தி வந்தது. போதகரை அழைத்து வர வேண்டாம் என்று அந்தச் செய்தியில் கூறினர். ஒரு மணி நேரம் முன்னால் போயிருந்தால் என் மகள் பிழைத்திருப்பாள் என்று அந்தத் தகப்பன் கலங்கி இருப்பான். அதனால் யவீரு நம்பிக்கை இழந்திருப்பதைப் பார்த்த இயேசு அவருடைய விசுவாசத்தை ஊக்குவிக்க எண்ணினார்.

இதேபோல் கர்த்தர் விசுவாசத்தை ஊக்குவித்துச் செயல்பட்டதைப் பல இடங்களில் காணலாம். அதில் சிலவற்றை இங்கு கூற விரும்புகிறேன். ஆபிரகாம் ஈசாக்கைப் பலியிடச் சென்றபோதும் (ஆதி. 22:2, யாக்கோபு 2 : 21, 22) மோசே செங்கடலைப் பிளக்க இருந்த போதும் (யாத்திராகமம் 14:10-22) தாவீது கோலியாத்தை வீழ்த்த நினைத்தபோதும் (1 சாமுவேல் 17:44-47) யோசபாத் அமோனியரையும், மோவாபியரையும், சேயீர் மலை தேசத்தாரையும் வீழ்த்த நினைத்தபோதும் (2 நாளாகமம் 20:1,2,15) கர்த்தர் இவர்களின் விசுவாசத்தை ஊக்குவித்து செயலில் இறங்க வைத்து ஜெயம் பெற வைத்தார். இந்த அற்புதத்திலும் யவீருவின் விசுவாசத்தை ஊக்குவித்தார். இயேசுவோடு நாம் நடக்கிற விசுவாசப் பாதையில் இதேபோன்ற துர்செய்திகள் வரும். நஷ்டம், தோல்வி, சாவு என்றெல்லாம் வரும். பயப்படாமல் தைரியமாக இருக்க வேண்டும். நம்முடைய வாழ்க்கையிலும் சில காரியங்கள் தேவனிடம் கேட்டுத் தாமதமாகலாம். அது நன்மைக்காக தான் என்று விசுவாசத்துடன் காத்திருக்க வேண்டும். அதற்கு கலங்கவோ, முறுமுறுக்கவோ கூடாது. நாம் எதிர்பார்ப்பதைவிட அதிகமான ஒன்றைக் கொடுப்பதற்காகத்தான் தாமதம் பண்ணுவார்.

**இயேசுவின் ஆறுதலான வார்த்தைகள்:**

**லூக்கா 8:50** இயேசு அதைக் கேட்டு: பயப்படாதே; விசுவாசமுள்ளவனாயிரு, அப்பொழுது அவள் இரட்சிக்கப்படுவாள் என்றார்.

இயேசு ஜெபஆலயத்தலைவனின் விசுவாசத்தைத் தூண்டுவதற்காக பயப்படாதே என்றும், விசுவாசமுள்ள வனாயிரு என்றும் கூறினார். விசுவாசத்துடன் இருப்பாயானால் உன்னுடைய மகள் இரட்சிக்கப்படுவாள் என்றும் வாக்குறுதி அளித்தார். ஏனென்றால் அவன் கேட்ட துர்ச்செய்தி அவனுக்குள்ளிருக்கும் விசுவாசத்தைக் கெடுத்து அவிசுவாசம் வந்துவிடக்கூடாது என்று இயேசு துரிதமாக பயப்படாதே என்கிறார். சொன்னதோடு நில்லாமல் (யோசுவா 1 : 5) நான் உன்னோடு கூட இருப்பேன் என்று வாக்குரைத்த தேவன் அவனோடு கூடச் சென்றார். இயேசு தன்னோடு வருவதால் கண்டிப்பாக அற்புதம் நடக்குமென்ற நம்பிக்கையோடு தகப்பன் சென்றிருப்பான். இயேசு சுகமாக்குகிறவர் மட்டும் அல்ல, நம்முடைய உணர்வுகளை, பாசத்தை, வேதனைகளைப் புரிந்து கொள்கிறவர். இதேபோல் கர்த்தர் குணமாக்கும் இடங்களிலும், லாசருவை உயிரோடு எழுப்பிய போதும், விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய் என்று கூறி அற்புதங்களைச் செய்ததை வேதத்தில் பல இடங்களில் பார்க்கிறோம்.

**மாற்கு 9 : 23** ல் நீ சுவாசிக்கக்கூடுமானால் ஆகும், விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும். என்று இயேசு தன்னுடைய வாயால் கூறியதைப் பார்க்கிறோம்.

தொடரும்...

– உங்கள் அண்ணன் **JP**

சிறுவர் பகுதி


# ஏலியும், சாமுயேலும்

ஹாய் குட்டிங்களா நல்ல இருக்கிறீர்களா! இந்த மாதம் மீண்டும் உங்களோடு பேசுவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். வேதத்தில் 1 சாமுயேல் 3:1-21 வரை உள்ள உண்மை நிகழ்வுகளை நாம் படிக்கலாம்.

சீலோவாம் ஊரிலே கர்த்தருடைய ஆலயம் இருந்தது. அங்கே இரண்டு மனிதர்கள் கர்த்தருக்கு பணிவிடை செய்து கொண்டிருந்தார்கள். அதாவது வயதான கண்பார்வை மங்கிப்போன ஏலி என்னும் தாத்தாவும், அவரோடு கர்த்தருக்கு பணிவிடை செய்து கொண்டிருந்த சாமுயேல் அண்ணாவும் இருந்தார்கள். ஒருநாள் ஏலி தாத்தாவும், சாமுயேல் அண்ணாவும் தேவாலயத்தில் விளக்கு அணைவதற்கு முன்பதாக படுத்துக் கொண்டார்கள். இருவரும் நன்றாக தூங்கி விட்டார்கள். அப்பொழுது ஒரு சத்தம் உண்டாயிற்று. அந்த சத்தம் யாருடையதாக இருக்கும் என்று நினைக்கிறீங்க, சரி படிக்கலாம், அந்த சத்தம் சர்வ வல்லமையுள்ள பரலோக பரிசுத்த கர்த்தரின் சத்தமாயிருந்தது. அந்த சத்தத்திலே கர்த்தர் சாமுயேல் அண்ணாவைக் கூப்பிட்டார்.

பிள்ளைகளே நன்றாக கவனியுங்கள் தேவாலயத்தில் எத்தனைப்பேர் இருந்தார்கள்? ஏலி தாத்தாவும், சாமுயேல் அண்ணாவும் அல்லவா! அப்படியென்றால், சாமுயேல் அண்ணாவை மட்டும் கர்த்தர் ஏன் கூப்பிட வேண்டும்? ஏனென்றால், சாமுயேல் அண்ணா உங்களைப்போல் சிறுவயது உள்ளவராக இருந்தார். கர்த்தருக்கு உங்களைப் போல் சிறு பிள்ளைகளைத் தான் மிகவும் பிடிக்கும். சரி அடுத்தது என்ன நடந்தது என்று நாம் படிக்கலாம். கர்த்தர் சாமுயேலை இரண்டுதரம் கூப்பிட்டபோது. அவர் எழுந்து ஏலி தாத்தாவிடம் போய் என்னைக் கூப்பிட்டீர்களா? என்று கேட்டார். நான் கூப்பிடவில்லை நீ போய் படுத்துக்கொள் என்று சொன்னார். அவன் போய் படுத்துக் கொண்டான்.

கர்த்தர் மீண்டும் மூன்றாம் தரம் சாமுயேல் அண்ணாவைக் கூப்பிட்டார். ஆனால் சாமுயேல் அண்ணா கர்த்தர் கூப்பிடுகிறார் என்று இன்னும் அறியாதிருந்தான். அவன் எழுந்துபோய் ஏலி தாத்தாவிடம் என்னைக் கூப்பிட்டீர்களா? என்று கேட்டான். ஏலி தாத்தாவுக்கு அப்பொழுதுதான் தெரிய வந்தது அந்த சத்தம் கர்த்தருடையது என்று. ஏலி தாத்தா சாமுயேலைப் பார்த்து நீ போய் படுத்துக் கொள், உன்னைக் கூப்பிட்டால் அப்பொழுது நீ



கர்த்தாவே சொல்லும் அடியேன் கேட்கிறேன் என்று சொல் என்று தாத்தா அவனிடம் சொன்னார்.

உடனே தன் இருப்பிடத்திலே போய் படுத்துக் கொண்டான். கர்த்தர் மறுபடியும் சாமுயேலே சாமுயேலே என்றுக் கூப்பிட்டார். அப்பொழுது சாமுயேல் கர்த்தரை நோக்கி சொல்லும் அடியேன் கேட்கிறேன் என்று சொன்னான். பிள்ளைகளே இதிலே நீங்கள் என்ன கற்றுகொண்டீர்கள்? சாமுயேல் அண்ணா சிறு பிள்ளையாயிருந்து தேவாலயத்திலே வேலை செய்து கொண்டுவந்தார். தேவனுக்குப் பிரியமானபடி நடந்துக் கொண்டார். அதினாலே கர்த்தர் சாமுயேலோடு பேசினார். அது மாத்திரமல்ல சாமுயேல் அண்ணா வயதான தாத்தாவாகிய எலிக்கு செவிகொடுத்து அவருக்கு கீழ்படிந்தான். பிள்ளைகளே வயதிலே முதிர்ந்தவர்களுக்கு நாம் மரியாதை கொடுத்து அவர்களுக்கு கீழ்ப்படிய வேண்டும். அவ்வாறு கீழ்படியும்போது கர்த்தர் சாமுயேல் அண்ணன்கூட இருந்தது போல உங்களோடும் இருப்பார். சாமுயேல் கர்த்தருக்கும், வயதானவர்களுக்கும் கீழ்படிந்து நடந்ததினாலே சாமுயேல் அண்ணாவை இஸ்ரயேல் தேசமெங்கும் தெரியவரும்படி கர்த்தர் அவனை உயர்த்தினார்.

நீங்கள் கூடிவரும் சபைகளிலும், உங்கள் வீடுகளிலும் உள்ள முதிர் வயதுள்ளவர்களை, ஊழியக்காரர்களைக் கனம் பண்ணுங்கள், கீழ்படிந்து நடவுங்கள். அவ்வாறு நடக்கும்பொழுது கர்த்தர் உங்களுக்கு ஞானத்தையும், சாமர்த்தியமான இருதயத்தையும் தருவார். இவ்வாறு நடப்பது கர்த்தருக்கு பிரியமான செயல்பாடுகள், தேவன் உங்களை ஏற்றக்காலத்திலே உயர்த்துவாராக. ஆமென்.

**மனப்பாட வசனம்: சங்கீதம் 105:4** "கர்த்தரையும், அவர் வல்லமையையும் நாடுங்கள்; அவர் சமுகத்தை நித்தமும் தேடுங்கள்"

— சகோ. பீட்டர்

சிறுவர் பகுதி


# ஆபிரகாமும், லோத்தும்

ஹாய் குட்டீஸ்! உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன்.

ஆபிரகாம் அவர் சகோதரனுடைய மகனாகிய லோத்தும் இணைந்து கானான் தேசத்திலே குடியிருந்தார்கள். அவர்கள் இருவருக்கும் மிகுதியான ஆஸ்திகள் (சொத்துக்கள்) இருந்தது. அதினாலே அவர்கள் இருவரும் ஒரே இடத்தில் குடியிருக்க முடியாமல் போனது. அதுமட்டுமல்லாமல் ஆபிரகாமினுடைய மேய்ப்பர்களுக்கும், லோத்துவினுடைய மேய்ப்பர்களுக்கும் வாக்குவாதம் உண்டாயிற்று.

ஆபிரகாம் லோத்தை நோக்கி: எனக்கும் உனக்கும், என் மேய்ப்பருக்கும் உன் மேய்ப்பருக்கும் வாக்குவாதம் வேண்டாம்; நாம் சகோதரர். நீ என்னைவிட்டு பிரிந்து போகலாம், இந்தத் தேசமெல்லாம் உனக்குமுன் இருக்கிறது. நீ வலதுபுறம் போனால் நான் இடதுபுறம் போகிறேன், நீ இடதுபுறம் போனால் நான் வலதுபுறம் போகிறேன் என்றார். லோத்து சோதோம் பட்டணத்திற்கு எதிராக கூடாரம் போட்டு அங்கே குடியிருந்தான். கர்த்தர் ஆபிரகாமை அழைத்து நீ குடியிருக்கிற இந்த தேசத்தை நான் உனக்கும், உன் சந்ததிக்கும் என்றைக்கும் இருக்கும்படி கொடுப்பேன் என்றார்.

சோதோம் கொமோராவின் பாவம் மிகவும் கொடியதாயிருந்தது. அந்த பட்டணங்களின் கூக்குரல் பெரியதாயிருந்ததினால் அவைகளை அழிக்கப் போகிறேன் என்று கர்த்தர் சொன்னார். எனவே, ஆபிரகாம் கர்த்தருக்கு முன்பாக நின்று லோத்துவிற்காகவும், அவன் குடும்பத்திற்காகவும் அவர்களை அழிக்கப்படாதபடிக்கு அவரை வேண்டிக் கொண்டான். ஆபிரகாமின் வேண்டுதலின்படியே கர்த்தர் லோத்தையும், அவன் மகள்கள் இருவரையும் உயிரோடே காப்பாற்றினார். லோத்தினுடைய மனைவியோ சோதோம் கொமோரா பட்டணங்கள் அழிக்கப்படும்போது பின்னிட்டுப் பார்த்து உப்புத் தூண் ஆனாள்.



குட்டீஸ்! இதிலிருந்து நாம் என்ன கற்றுக் கொள்கிறோம்? நமது அக்கா, அண்ணன், தம்பி, தங்கை, நண்பர்கள், உறவினர்களுக்கு ஏதாவது பிரச்சனை என்றால் அவர்களோடு சண்டை போடாமல் சமாதானமாக இருக்க வேண்டும். அவர்களுக்கு ஒரு தேவையோ, இக்கட்டோ வரும்போது அன்றைக்கு எனக்கு இவன் தீமை செய்தான் அல்லவா! அதனால் இன்றைக்கு இவன் கஷ்டப்படும்போது, இவனுக்கு இதுவும் வேண்டும், இன்னமும் வேண்டும் என்று எண்ணாமல், சந்தோஷப்படாமல் அவர்களுக்காக தேவனிடம் விண்ணப்பம் செய்து, அவர்களுக்கு ஆறுதலாக நாம் இருக்க வேண்டும் என்று தேவன் உங்களிடம் எதிர்பார்க்கிறார். இதுதான் தேவனில் பிரியமாயிருக்கிறவர்கள் செய்கிற செயல். அப்படியிருந்தால் தேவன் நம்மீது அதிக விருப்பமும், அக்கறையும் உள்ளவராயிருப்பார் குட்டீஸ்.

எனவே, நமது செயல்களையும், குணங்களையும் மாற்றி தேவன் விரும்புகிற காரியத்தை அதிகமாய் செய்ய முயற்சி செய்வீர்களா!

**மனப்பாட வசனம்: நீதிமொழிகள் 4:13** "புத்திமதியை உறுதியாய்ப் பற்றிக்கொள், அதை விட்டுவிடாதே; அதைக்காத்துக்கொள், அதுவே உனக்கு ஜீவன்."

– சகோதரி. குயினி கமலகிருபா

சிறுவர் பகுதி

# யோர்தானை கடந்து செல்லுதல்

கடவுளுக்கு பிரியமான செல்லங்களா! நீங்கள் எல்லாரும் எப்படியிருக்கிறீர்கள்? நல்லாயிருக்கிறீர்களா?

இந்த மாதம் கடவுளின் பிள்ளைகள் யோர்தானை கடந்து செல்வதை கற்றுக்கொள்ளலாமா?

யோர்தானை கடவுளின் பிள்ளைகள் கடந்து செல்வதற்கு உதவுமாறு கடவுள் யோசுவாவை நியமித்தார். கர்த்தர் இந்த வேலைக்கு யோசுவாவை அழைத்தப்போது யோசுவா இரவும் பகலும் வேதத்தைத் தியானித்துக் கொண்டிருந்தாங்க.



யோசுவா அண்ணன் என்ன செய்தாங்க தெரியுமா? அதிகாலமே எழுந்திருந்தாங்க, அன்றைய நாளுக்கு உரிய கடமைகளை நிறைவேற்ற ஆயத்தமானாங்க, ஏனென்றால் யோர்தானை கடப்பது என்பது மனித யோசனை அல்ல, கடவுளின் ஏற்பாடு. எனவே அதற்கு கடவுளின் ஆலோசனையும், ஒத்தாசையும் தேவை.

அதனால் யோசுவாவும், ஜனங்களும் என்ன செய்தார்கள் தெரியுமா? யோர்தானின் கரையில் மூன்று நாட்கள் ஏற்ற வேலைக்காக காத்திருந்தார்கள். நாம் சில நேரத்தில் நம்முடைய தேவைகள் உடனே நிறைவேறனும் என்று அவசரபட்டு கஷ்டபடுகிறோம், அப்படி செய்யக் கூடாது. அதற்கான கர்த்தரின் வேலைக்காக காத்திருக்கனும்.

ஜனங்களுக்கு முன்னாடி ஆசாரியர்கள் உடன்படிக்கை பெட்டியை சுமந்து செல்ல வேண்டும். இன்றைக்கு நீங்கள் விளையாட்டு பொருளை சுமக்கிறீர்கள், செல்போனை சுமக்கிறீர்கள், பைபிளை சுமக்கிறீர்களா? யோசுவா அண்ணனை போல பைபிள் படிக்கிறீர்களா?

இது மக்களுக்கு புது வழி, நாம் எந்த காரியத்தை செய்தாலும் ஜெபித்து, கடவுளின் ஆலோசனை கேட்க வேண்டும். உடன்படிக்கை பெட்டியை சுமக்கிற ஆசாரியர்களின் கால்கள் யோர்தானில் பட்டவுடனே என்ன நடந்தது தெரியுமா?

யோர்தான் நதி குவியலாக மாறினது, யோர்தானை கடந்து எல்லாரும் சென்றார்கள். கர்த்தர் நமக்கு யோர்தானை கடக்க வழியை திறக்கிறவர் மட்டும் அல்ல அவர் நம் கூடவே இருந்து வழிநடத்துபவர்.

கடவுளுக்கு பிரியமான செல்லங்களா!

இந்த பாவத்தை விட்டு கடந்துபோக முடியல, அம்மா அப்பாவுக்கு கீழ்ப்படிய முடியல, பள்ளி கூட ஆசிரியருக்கு கீழ்ப்படிய முடியல, என்னால நல்லா படிக்க முடியல என்று கவலைப்பட வேண்டாம்.

தினமும் யோசுவாவைப்போல பைபிளை படியுங்கள், ஜெபியுங்கள், சபைக்கு தவறாமல் செல்லுங்கள். கடவுளின் ஆலோசனையும், வழிநடத்துதலும் உங்களுக்குக் கிடைக்கும் யோர்தானைப் போல இருக்கும் எல்லாவற்றையும் கடந்துபோக கடவுள் உங்களுக்கு நிச்சயம் உதவிசெய்வார்.

**மனப்பாட வசனம்: உபாகமம் 31:6** “அவர் உன்னை விட்டு விலகுவதும் இல்லை, உன்னைக் கைவிடுவதும் இல்லை என்று சொன்னான்.”

– சகோ. அன்பு ஏசுதாஸ்

பொதுவான செய்திகள்

## சிவப்பு நிற ரயில்களுக்கும் நீல நிற ரயில்களுக்கும் என்ன வித்தியாசம்?



இந்தியாவில் ரயில் பயண சேவை தொடங்கப்பட்டு 170 வருடங்களைத் தாண்டியும் கூட இன்றளவும் பெரும்பாலானவர்களின் முதல் தேர்வாக இது உள்ளது. சொகுசு கார்களை விட நீண்ட தூர பயணத்திற்கு சிறந்ததாக ரயில் பயணத்தை பலரும் கருதுகின்றனர். நீண்ட தூரம் அசதி இல்லாமல் பயணம் செய்வதற்கு ரயிலை விட ஏற்றது வேறு எதுவும் இல்லை. ரயிலின் சிறப்பு வகுப்புகள் மிகவும் சொகுசாகவும் பயணக் களைப்பு இல்லாமலும் சிறப்பான அனுபவத்தைத் தருகிறது.

நாம் ரயில் நிலையங்களில் நீல நிறத்தில் சில ரயில்களையும் சிவப்பு நிறத்தில் சில ரயில்களையும் பார்த்திருப்போம். பெரும்பாலானவர்கள் இந்த வண்ணங்கள் ரயிலின் அழகுக்காகவும், தோற்றத்திற்காகவும் இந்நிறம் பூசப்பட்டுள்ளதாக நினைத்திருப்பார்கள். ஒவ்வொரு வண்ணத்திற்கும் ரயில் உருவாக்கத்தில் தனி வரலாறு உண்டு.

**நீல நிறப் பெட்டிகள் ICF:**

1952ல் நாட்டிற்கு விடுதலை கிடைத்த பின்னர் இந்த ரயில் பெட்டித் தொழிற்சாலை நிறுவப்பட்டது. அதன்பிறகு, இங்கு ரயில் பெட்டிகள் தயாரிக்கப் படுகின்றன. இந்த தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் நீல நிறப் பெட்டிகள் அனைத்தும் இரும்பினால் செய்யப்பட்டவை. இந்த ரயில் பெட்டிகளில் ஏர் பிரேக்குகள் பயன்படுத்தப்படுகின்றன. இந்த ரயில் பெட்டிகளின் அதிகபட்ச அனுமதிக்கப்பட்ட சராசரி வேகம் மணிக்கு 110 கி.மீ. மட்டுமே. நீல நிறப் பெட்டிகளில் படுக்கை வகுப்பில் 72 இருக்கைகளும் குளிர்சாதன 3ம் வகுப்பில் 64 இருக்கைகளும் உள்ளவாறு தயாரிக்கப்பட்டது. இந்தப் பெட்டிகளில் உள்ள பொருட்களை 18 மாதங்களுக்கு ஒரு முறை மாற்றியமைக்க வேண்டும்.

**சிவப்பு நிற ரயில் பெட்டி (லிங்க் ஹாஃப்மேன் புஷ் LHB):**

சிவப்பு நிற ரயில் பெட்டி தொழில்நுட்பம் ஜெர்மனியில் இருந்து இந்தியாவுக்குக் கொண்டு வரப்பட்டது. பஞ்சாப் மாநிலத்தில் உள்ள கபுர்தலாவில் சிவப்பு நிற ரயில் பெட்டிகள் தயாரிக்கும் தொழிற்சாலை உள்ளது. இந்த வகைப்பெட்டிகள் துருப்பிடிக்காத எஃகுவால் உருவாக்கப்படுகின்றன. மேலும் டிஸ்க் பிரேக்குகள் இதில் பயன்படுத்தப்படுகின்றன.

சிவப்பு நிறப் பெட்டிகளை 24 மாதங்களுக்கு ஒருமுறை மாற்றியமைக்க வேண்டும். இதனால் நீல நிறப் பெட்டிகளை விட, இவற்றின் பராமரிப்பு செலவு குறைவாக உள்ளது. இந்தப் பெட்டிகளின் அதிகபட்ச அனுமதிக்கப்பட்ட வேகம் மணிக்கு 200 கி.மீ. ஆகும். இந்தப் பெட்டியின் படுக்கை வகுப்பில் 80 இருக்கைகளும், குளிர்சாதன 3ம் வகுப்பில் 72 இருக்கைகள் உள்ளன. பராமரிப்பு செலவும் குறைவு, பாதுகாப்பும் அதிகம்.

# மிரியாம்

எண்ணாகமம் 12ம் அதிகாரம்

கடவுளையும் அவரது வசனத்தையும், சபையையும் நேசிக்கிற செல்லப்பிள்ளைகளே! எல்லாரும் எப்படியிருக்கிறீர்கள். அனைவரும் நலமாயிருப்பீர்கள் என்று கர்த்தருக்குள் நம்புகிறேன்.

இம்மாதம் நாம் மோசேயின் சகோதரி (அக்கா) மிரியாமைப்பற்றி படித்து, கற்றுக்கொள்ள போகிறோம்.


மோசே பிறந்தபோது அவரை மிகவும் பாசமாகவும், கவனத்துடன், மிகுந்த மகிழ்ச்சியுடன் பாதுகாத்து ஒரு நல்ல அக்கா இந்த மிரியாம். எபிரெயரில் பிறந்த பெண் பிள்ளைகளை உயிரோடே வைக்கவும், ஆண் பிள்ளைகளையெல்லாம் நதியிலே போட்டுவிட வேண்டும் என்று எகிப்தின் ராஜாவின் கட்டளை அமலில் இருந்தபோது, இந்த மிரியாம் அக்கா மோசேயை காப்பாற்றின விதம் மிகவும் பிரமிப்பானது. அதை யாத். 2:1-10ல் படிக்கலாம்.

இப்படியெல்லாம் பாசமாகவும், பாதுகாப்பாகவும் வளர்த்து வந்த தனது சகோதரனோடு எகிப்திலிருந்து தேவன் விடுதலை கொடுத்து, இஸ்ரயேல் மக்களை வனாந்திரத்தில் நடத்திக் கொண்டு வரும்போது, அந்த கூட்டத்தில் மிரியாமும் இருந்தார்கள்.

தேவனானவர் மோசேயைக் கொண்டு எல்லா ஜனங்களையும் வனாந்திரத்தில் வழிநடத்திச் செல்வதை மிரியாமும் பார்த்தாங்க. மோசேயின் வாயிலாகவே தேவன் எல்லா செய்திகளையும் மக்களுக்கு சொல்லியதை நாம் படிக்க முடியும். அப்படியிருக்கும் போது இந்த மிரியாம் என்ன செய்தாங்க தெரியுமா? குட்டீஸ்! மோசேயின் மீது மிரியாமுக்கு மிகுந்த எரிச்சலும், கோபமும், வெறுப்பும் வந்தது. அதை எப்படி வெளிப்படுத்தினாங்க தெரியுமா? அதில் ஆரோனும் உடனிருந்தார்.

இஸ்ரயேல் ஜனங்கள் எல்லாரையும் கூட்டி சேர்த்து, அவர்களிடம் சொன்னது என்னவென்றால், கர்த்தர் மோசேயைக்கொண்டுமாத்திரம் பேசினாரோ, எங்களைக்கொண்டும் அவர் பேசினதில்லையோ என்றார்கள். மோசேயின் மீதுள்ள வெறுப்பினால் தன்னை ஒரு பெரிய தீர்க்கதரிசி என்று வெளிப்படுத்தினாங்க. இந்த காரியம் தேவனுடைய பார்வையில் மிகவும் பொல்லாப்பாயிருந்தது.

ஏன் தெரியுமா? மோசேயை தனக்காக பேசும்படி தெரிந்துகொண்டதும், அவரை மிகுந்த சாந்தகுணமுள்ளவரும், தனது வீட்டில் எங்கும் உண்மையுள்ளவராய் கண்டது தேவனல்லவா! குட்டீஸ். ஆனால் இந்த மிரியாமும், ஆரோனும் மோசேயின் மீதுள்ள கோபத்தினால் என்ன பேசுகிறோம் என்றுகூட அறியாமல் தனது பேச்சினாலும், இஸ்ரயேல் ஜனங்களிடையே குழப்பத்தையும், பிரிவினையையும் ஏற்படுத்தினாங்க.



இந்த காரியத்தினால் தேவன் மிரியாம் மேல் மிகுந்த கோபம் கொண்டார். இதனால் என்ன நடந்தது தெரியுமா? மிரியாமுக்கு உறைந்த மழையின் வெண்நிறம் போன்ற குஷ்டரோகம் அவர்களை பிடித்துக்கொண்டது. ஏழுநாள் ஆரோன் மோசேயிடம் நாங்கள் புத்தியீனமாய்ச் செய்த இந்தப் பாவத்தை எங்கள்மேல் சுமத்தாதிரும் என்று கெஞ்சினான். மோசே இவர்களுக்காக தேவனிடம் விண்ணப்பம் செய்தபடியால், கர்த்தர் சொன்னபடியே ஏழுநாட்களுக்குப்பின்பு அந்த குஷ்டரோகம் மிரியாமைவிட்டு நீங்கினது.

குட்டீஸ்! இதிலிருந்து நாம் என்ன பாடம் கற்றுக்கொள்கிறோம். தேவன் நமக்கு கொடுத்த நிலையில் நாம் அவருக்கு நன்றியுள்ளவர்களாக இருந்து, தேவனுக்குப் பிரியமானவைகளை எப்பொழுதும் செய்ய வேண்டும். யார்மீதும் தேவையற்ற வெறுப்பும், கோபமும் கொள்ளாமல் சமாதானமாய் இருக்க வேண்டும். அப்படியே நாமும் செய்வோமா! அடுத்த இதழில் சந்திப்போமா?

**மனப்பாட வசனம் :** **ரோமர் 12:17,18** "ஒருவனுக்கும் தீமைக்குத் தீமைசெய்யாதிருங்கள்...கூடுமானால் உங்களாலானமட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள்."

– சகோ. ஜான் செல்லையா

## சிறுவர்களுக்கான கேள்விகள்

1. கர்த்தர் மூன்றாம்தரம் சாமுயேலை கூப்பிட்டபோது, அவன் என்ன சொன்னார்?
2. ஆபிரகாம் லோத்திற்காக ஜெபித்தபோது கர்த்தர் செய்தது என்ன?
3. உடன்படிக்கை பெட்டியை சுமக்கிற ஆசாரியர்களின் கால்கள் யோர்தானில் பட்டவுடன் என்ன நடந்தது?
4. மிரியாமுக்கு என்ன தண்டனை வந்தது? ஏன் வந்தது?
5. யோசுவாவைப்போல நாம் தினமும் செய்ய வேண்டியது என்ன?

## ஏப்ரல் மாத கேள்விகள்

(ரோமர் புத்தகத்தில் இருந்து)

1) பவுல், எதை குறித்து வெட்கப்படேன் என்று சொன்னார்?
2) இரட்சிப்பு உண்டாவதற்கு தேவபெலனாயிருக்கிறது எது?
3) சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கி வைக்கிற மனுஷருக்கு உள்ளது என்ன?
4) அவபக்திக்கும் அநியாயத்திற்கும் விரோதமாய் வெளிப்படுத்தப் பட்டது என்ன?
5) அவர்கள் எதை பொய்யாக மாற்றினார்கள்?
6) உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது ஏன்?
7) என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட்டவர் யார்?
8) எதை பற்றிக்கொண்டிருக்க அவர்கள் மனதில்லாதிருந்தனர்?
9) தேவன் தீர்மானித்த நீதியான தீர்ப்பை அவர்கள் அறிந்திருந்தும் என்ன செய்தனர்?
10) சகலவித அநியாயத்தையும் செய்கிறவர்கள் எதற்கு பாத்திரராயிருக் கிறார்கள்?

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : 05-05-2025**

அனுப்ப வேண்டிய முகவரி : **சகோதரி. பேபி ராஜா**
45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு,
அரசரடி, மதுரை - 625 016
செல் : 92 4421 4421, 92 4431 4431

### சென்ற இதழ் பதில்கள்

| | |
|---|---|
| 1. அப். 1:4 | 6. அப். 2:14 |
| 2. அப். 1:3 | 7. அப். 2:36 |
| 3. அப். 1:5 | 8. அப். 2:38 |
| 4. அப். 1:12 | 9. அப். 2:47 |
| 5. அப். 2:7,8 | 10. அப். 2:41 |


### சென்ற இதழ் கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்





1) S.கார்த்திக் - கரூர்
2) Mrs. இந்திரா பாண்டி - மதுரை
3) Mrs.D. குளோரி திலகவதி - சென்னை
4) M. அன்பழகன் -தங்கமேடு
5) S. பேபி சந்தோஷ்குமார் - தங்கமேடு
6) V. மைனாவதி வசந்த் - தங்கமேடு
7) Mrs.J. புங்கொடி - முத்தூர்
8) Mrs. சூரிய பிரியா - மதுரை
9) Mrs. ஹெப்ஸிபா தாமஸ் - படப்பை
10) Mrs.P. சமாதானம் பீட்டர் - விருதுநகர்
11) Mrs. ஜெயந்தி செல்வகுமாரி - தரங்கம்பாடி
12) Mrs. அனிதா - தரங்கம்பாடி
13) J. கிறிஸ்டோபர் சாந்தகுமார் - மதுரை
14) S. டேவிட் சாந்தகுமார் - வல்லம்
15) S. ஷீபா ஞானவின்சா -டோனாவூர்
16) பரமசிவம் - புதுக்கோட்டை
17) S.G. சேகர் - ராணிபேட்டை
18) A. ஆலன் காலேப் - ராணிபேட்டை
19) D.I. அன்பு சுதந்திரம் - ஏர்வாடி
20) Mrs. சாந்தி ஜோயல் - திருச்சி
21) Mrs.A. அன்னத்தாய் ஆல்பர்ட் - தூத்துக்குடி
22) Mrs. ஸ்டெல்லா ஜெபகுமார் - நெல்லை
23) P. ரேச்சல் ஜானிமா - நெல்லை
24) J. ஜான்சி - ஆனைமலை
25) G. அந்தோணிதாஸ் - பரமகுடி
26) Mrs. ஹெலன் திலக் - தூத்துக்குடி
27) Mrs. தெல்மா ஸ்டான்லி - மதுரை
28) Mrs. சாந்தி வில்லியம் - புதுக்கோட்டை
29) A. லலிதா - புதுக்கோட்டை
30) S. அசோக்குமார் பிரின்ஸ் - தூத்துக்குடி
31) Mrs.R. சரோஜா - தென்கலம்
32) P. இளங்கோவன் - குன்னூர்
33) G. ஏஞ்சலம்மாள் - மதுரை
34) Y. ஜெயசுதா பொன்செல்வி - சென்னை
35) Mrs. C. வள்ளி சிதம்பரம் - கரூர்
36) M.S. ஜேம்ஸ் - திண்டுக்கல்
37) Mrs.A. இமல்டா சுந்தர்சிங் - ஈரோடு
38) R. ஞானசிரோன்மணி - மதுரை
39) Mrs. சாந்தி ஜோயல் - திருச்சி
40) J.V. சுந்தரபாய் வில்லியம் - சேலம்
41) Mrs. பியூலா ஜேசுராஜன் - புதுவை
42) D. சந்திரன் மோசஸ் - பெங்களூர்
43) Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் - சேலம்
44) Mrs. மேரி ராஜ் - மதுரை
45) Mrs. பட்ரிசியா டேவிட் - சேலம்
46) M. ஈஸ்வரி முருகன் - கரூர்
47) M. ராஜா -கரூர்
48) N. ஜான் செல்லையா - மதுரை
49) J. ஜெயராணி ஜான் - மதுரை
50) S. பாக்கியராஜம் - மதுரை
51) Mrs. ராணி குமரன் - கரூர்
52) A. கார்பஸ் பிலேமோன் - மதுரை
53) Mr. ஜோசப் ராஜா -ஒட்டஞ்சத்திரம்
54) Mrs. காந்தா மனோகரன் - திருச்சி
55) A. ரோஸ்மேரி - சென்னை
56) Mrs. தேவி ராஜாசிங் - திருப்பூர்
57) C. வைலட் கிறிஸ்டோபர் - தளவாய்புரம்
58) Mrs. பெரில் பாஸ்கர் - படப்பை
59) A. டேவிட் ஜெயசந்திரன் - மதுரை

தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் !

Place of Publication : **45 C/1, CHURCH LANE, CORONATION STREET, ARASARADI, MADURAI - 16.**
Printed & Published by **P.C. PHILEMON RAJAH**
Printed at **THEE CLASSIC PRINTERS, 27, KAKA THOPPU, MADURAI - 1 ☏ 94421 23819**
**Registered News Paper No. : TNTAM/2011/42166**
**Postal Registration No. : TN/MA/67/2024 - 2026**
**Date of Publication : 9th April 2025**
**Posted at Arasaradi HPO on 10th & 11th April 2025**


## கிருபையுள்ள வார்த்தை வெளியிட்டுள்ள சிறப்பு புத்தகங்கள்





அன்பார்ந்த வாசகர்களே! இந்த அனைத்து புத்தகங்களையும் உங்கள் ஆத்மீக வளர்ச்சிக்கு பயன்படுத்திக்கொள்ளும்படி வேண்டுகிறோம். ரூபாய் 100/- மட்டும் அனுப்பி இப்புத்தக தொகுப்பை பெற்றுக்கொள்ளுங்கள்!

## தபால் வழி பைபிள் பாடங்கள்



## கைபிரதிகள்









உங்கள் சுவிசேஷ ஊழியத்திற்கு கைபிரதிகள் பல்வேறு தலைப்புகளில் பாதி விலையில் கிடைக்கும். விபரங்களுக்கு : 92 4421 4421, 92 4431 4431


## BIBLE STUDY BOOKS IN ENGLISH











AVAILABLE FOR SPECIAL PRICE!

If undelivered please return to :

**EDITOR**
**KIRUBAIYULLA VAARTHAI**
P.O. Box No. 15, Arasaradi,
Madurai - 625 016. India
biblecourseindia@gmail.com
@graciouswordcoc
92 4421 4421, 92 4431 4431

To

Visit www.graciousword.org to read kv magazine online
follow us in facebook : NT Gospel Restorers